இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
திங்கள்கிழமை 26-06-2023

# பாட்னாவும் வாசிங்டனும் 1

இந்தியாவின் எதிர்காலத்துக்கான பாதையை பாட்னா வகுத்துக் காட்டி இருக்கிறது. வழிகாட்டி இருக்கிறது!

"பாட்னாவில் கூடினோம், மகிழ்ச்சியோடு திரும்பினோம்" -என்று தமிழ்நாடுமுதலமைச்சர்மு.க.ஸ்டாலின்அவர்கள்சொல்லிஇருக்கிறார்கள். அந்த வரிகளிலேயே மொத்தமும் அடங்கி இருக்கிறது.

**"ஒன்றிய அளவில் ஆட்சியில் இருக்கும் பா.ஜ.க. ஆட்சியை வீழ்த்துவது என்பதை நோக்கமாகக் கொண்டதாக இந்தக் கூட்டத்தை பீகார் முதலமைச்சர் நிதிஷ்குமார் அவர்கள் கூட்டினார். பா.ஜ.க. என்று சொல்வதால் தனிப்பட்ட ஒரு கட்சிக்கு எதிரான கூட்டணியாக இதனை யாரும் நினைக்க வேண்டாம். இந்தியாவின் ஜனநாயகத்தை - மக்களாட்சியை - மதச்சார்பின்மையை - பன்முகத்தன்மையை - ஒடுக்கப்பட்ட மக்களை - ஏழை எளிய மக்களைக் காப்பாற்ற வேண்டுமானால் பா.ஜ.க. மீண்டும் ஒரு முறை ஆட்சிக்கு வரக் கூடாது என்பதில் அனைத்துக் கட்சிகளும் தெளிவாக இருக்கிறோம். இதில் கடைசி வரை உறுதியாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி நான் சொல்லி இருக்கிறேன்" என்பதைக் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "2023 ஜூன் 23 ஆம் தேதி கூடினார்கள் - 2024 மே மாதம் வெற்றி பெற்றார்கள் என்பது மட்டும் தான் வரலாற்றில் பதிவாக வேண்டும் என்று அந்தக் கூட்டத்தில் நான் சொல்லி இருக்கிறேன்" என்றும் தெரிவித்துள்ளார்கள்.**

"பா.ஜ.க.வை வீழ்த்துவதை அனைத்துத் தலைவர்களும் ஒற்றை இலக்காகக் கொண்டு விட்டார்கள். பா.ஜ.க.வை வீழ்த்த அனைத்துக் கட்சிகளும் ஒன்று பட வேண்டும் என்று நினைத்தோம். அந்த ஒற்றுமை பாட்னாவில் ஏற்பட்டு விட்டது" என்று முதலமைச்சர் அவர்கள் சொல்லி இருப்பதே இந்திய நாட்டுக்குச் சொன்ன நற்செய்தி ஆகும்.

மம்தா பானர்ஜி வரமாட்டார், அகிலேஷுக்கு ஆர்வம் இல்லை, அரவிந்த் கெஜ்ரிவால் நிச்சயம் வரமாட்டார் என்று தொடர்ச்சியாக எழுதி வந்தார்கள். அந்தக் கட்சியுடன் இந்தக் கட்சி சேராது, இவர்கள் இருந்தால் அவர்கள் வர மாட்டார்கள் என்று எழுதி வந்தார்கள். அவர்கள் ஆசையில் மண் விழ, அனைவரும் வந்துவிட்டார்கள்.

இப்போது இந்தியாவில் இருக்கும் மற்ற கட்சிகளின் பெயரை எழுதி அவர்கள் எல்லாம் பாட்னா வரவில்லை என்று எழுதிக் கொண்டு இருக்கிறார்கள். பாட்னாவுக்கு அழைப்பு விடுத்தவர்கள் அனைவரும் வந்திருக்கிறார்கள். அழைக்கப் படாதவர்கள் எப்படி வருவார்கள்? காங்கிரசு - பா.ஜ.க. ஆகிய இரண்டையும் எதிர்க்கும் சில கட்சிகளுக்கு பாட்னா கூட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என்பதுதான் உண்மையே தவிர, அவர்கள் வரவில்லை என்பது உண்மையல்ல.

பாட்னா கூட்டம் வெற்றி என்பதன் அடையாளம்தான் அமித்ஷா பேச்சில் தெரிகிறது. 'அது எதிர்க்கட்சிகளின் போட்டோ ஷூட்' என்று வயிற்றெரிச்சலைக் காட்டி இருக்கிறார் உள்துறை அமைச்சர். ஒன்பது ஆண்டுகளாக இந்தியாவே மோடியின் போட்டோஷூட்டைத் தான் பார்த்துக் கொண்டு இருக்கிறது. அவர் எந்த உடை போடவில்லை? எந்த தொப்பி வைக்கவில்லை? யார் வேஷம் கட்டவில்லை? சுமார் ஆயிரம் வேஷங்களில் பிரதமரின் புகைப்படம் இணையத் தளங்களில் இருக்கிறது. மெகா போட்டோ ஷூட் தான் பா.ஜ.க. ஆட்சியே.

குஜராத் முன்னேறிவிட்டது என்று போலியான 'போட்டோ ஷாப்' மூலமாக ஆட்சியைப் பிடித்து, நித்தமும் போட்டோ ஷூட் நடத்திக் கொண்டு இருப்பதுதான் பா.ஜ.க.வின் ஆட்சியே தவிர, எதிர்க்கட்சிகள் நடத்துவது போட்டோஷூட் அல்ல!

**முதலில் இது எதிர்க்கட்சிகளின் கூட்டம் அல்ல. மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி சொல்லி இருக்கிறார்: "நாங்கள் எதிர்க்கட்சிகள் அல்ல, பாரத மாதாவை நேசிக்கும் தேசபக்தி கொண்ட இந்தியக் குடிமக்கள்" என்று சொல்லி இருக்கிறார். இந்தியாவில் ஜனநாயகம், ஒன்பது ஆண்டுகளாகக் கருகிக் கொண்டு இருக்கிறது. அதனைக் காப்பாற்றுவதற்கான கூட்டத்தின் தொடக்கம்தான் பாட்னா. "மீண்டும் இந்த அரசு வந்தால் இந்தியாவில் தேர்தல்களே நடக்காது" என்கிறார் மம்தா. "மதச்சார்பற்ற ஜனநாயக நாடு என்ற பெயரை மாற்ற பா.ஜ.க. விரும்புகிறது. நாம் அதனை பாதுகாக்க விரும்புகிறோம்" என்று சொல்லி இருக்கிறார் மார்க்சிஸ்ட் பொதுச்செயலாளர் சீதாராம் யெச்சூரி.**

மணிப்பூர் ஐம்பது நாட்களாக பற்றி எரிந்து கொண்டு இருக்கிறது. அமெரிக்காவில் ஜனநாயகம் பேசி வருகிறார் இந்தியப் பிரதமர். இந்தியாவில் ஜாதி, மதப் பாகுபாடு இல்லையாம். இந்தியாவில் பத்திரிக்கையாளர்களைப் பார்த்தே பழக்கம் இல்லாத பிரதமரிடம்,"இந்தியாவில் சிறுபான்மை யினருக்கு எதிராக பாகுபாடு காட்டப்படுவதாகவும், அரசை விமர்சிப்பவர்களை வாய் திறக்காமல் செய்வதாகவும் மனித உரிமை அமைப்புகள் குற்றம் சாட்டுகிறதே?" என்று கேட்கப்படுகிறது.

"இந்தியாவின் மரபணுவில் ஜனநாயகம் உள்ளது. இந்திய அரசமைப்பு சட்டத்தில் ஜனநாயகம் உள்ளது. ஜனநாயக கொள்கைகளை நாங்கள் பின்பற்றுகிறோம். இந்தியா ஜனநாயக நாடு என அழைக்கப்படுகிறது. அப்படி அழைக்கப்படுவதால் இந்தியாவில் ஜனநாயகம் உள்ளது. ஜாதி, மத பாகுபாடுகள் இந்திய ஜனநாயகத்தில் காட்டப்படுவது இல்லை" - இதுதான் பிரதமரின் பதில்.

**இந்த பதிலில் ஜனநாயகம், ஜனநாயகம் என்ற வார்த்தை இருக்கிறது அவ்வளவுதான். ஆனால் நடைமுறையில் பா.ஜ.க.விடம் ஜனநாயகம் கிடையாது. 'மானே - தேனே போட்டுக்கோ' என்பது மாதிரி ஜனநாயகம், ஜனநாயகம் என்று பதிலில் சொல்லிக் கொண்டார்.**

- தொடரும்

## திருவள்ளூரில் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு!

திருவள்ளூர்,ஜூன் 26 –
தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பாக மாவட்ட அளவில் பள்ளி மற்றும் கல்லூரி மாணாக்கர்கள், பொதுமக்கள், அரசு ஊழியர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் என 5 பிரிவுகளில் முதலமைச்சர் கோப்பைக்காக நடைபெற்ற 50 வகையான விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற 1886 வீரர், வீராங்கனைகளுக்கு திருவள்ளூர் மாவட்டம், பட்டறைப்பெரும்புதூர் டாக்டர்.அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி பதக்கங்கள், சான்றிதழ்கள் மற்றும் ரூ37.68 இலட்சம் மதிப்பீட்டிலான காசோலைகளை வழங்கி பாராட்டினார்.

இதில் ஆட்சியர் ஆல்பி ஜான் வர்கீஸ், மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ வி.ஜி.ராஜேந்திரன் எம்.எல்.ஏ, டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ, கே.ஜெயக்குமார் எம்.பி, துரை சந்திரசேகர் எம்.எல்.ஏ மாவட்ட சேர்மன் கே.வி.ஜி.உமாமகேஸ்வரி, கல்லூரி முதல்வர் முனைவர். கயல்விழி, மாவட்ட விளையாட்டு துறை அலுவலர் க.பிரேம்குமார், அரங்க அலுவலர் செ. அருணா, மற்றும் கே.திராவிடபக்தன், ஆர்.டி.இ.ஆதிசேசன், எல்லாபுரம் ஜெ.மூர்த்தி, ப.சிட்டிபாபு, த.எத்திராஜ், மகாலட்சுமி மோதிலால், சி.சு.ரவிச்சந்திரன், ஆர்.ஜெயசீலன், மோ.ரமேஷ், கே.அரிகிருஷ்ணன், சி.ஜெ.சீனிவாசன், ஆ.சக்திவேலு, அபிராமி குமரவேல், விஜயகுமாரி சரவணன், சுபாஷினி பாஸ்கர் உள்பட பலர் பங்கேற்றனர்.



முதலமைச்சரும் கழகத் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்களை தஞ்சை வடக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.கல்யாணசுந்தரம் எம்.பி., தமது பிறந்த நாளை முன்னிட்டு சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

முதலமைச்சர் கோப்பை - 2023 மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகள்!

## ஜூன் 30-ஆம் தேதி நேரு உள்விளையாட்டு அரங்கில் நடைபெறுகிறது!

### அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார்!

சென்னை, ஜூன் 26-
முதலமைச்சர் கோப்பை - 2023 மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகள் தொடக்க விழா 2023 ஜூன் மாதம் 30-ஆம் தேதி அன்று சென்னை நேரு உள் விளையாட்டு அரங்கத்தில் நடைபெறுகிறது. இந்த விழாவினை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைக்கிறார்.

44வது செஸ் ஒலிம்பியாட் போட்டியின் நிறைவு விழாவின் போது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் கபடி, சிலம்பம் உட்பட 15 விளையாட்டுகளில் பள்ளி, கல்லூரி, பொதுப்பிரிவு, அரசு ஊழியர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு நடத்தப்படும் என அறிவித்தார்கள். அந்த வகையில் அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள் பிப்ரவரி 2023-ஆம் மாதம் முதல் வாரத்தில் தொடங்கி மார்ச் 2023-ஆம் மாதம் முடிய நடைபெற்றது.

இந்த மாவட்ட அளவிலான போட்டிகளில் மூன்று இலட்சத்து எழுபத்து ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட வீரர் மற்றும் வீராங்கனைகள் கலந்து கொண்டனர். மாவட்ட அளவிலான போட்டிகளில் வெற்றி பெற்ற 27,000க்கும் மேற்பட்ட வீரர் மற்றும் வீராங்கனைகள் மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ள தேர்வு செய்யப்பட்டனர்.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் சென்னையில் 17 இடங்களில் ஜூலை 01ந் தேதி முதல் ஜூலை மாதம் 25-ந் தேதி வரை முதலமைச்சர் கோப்பை மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகள் நடைபெறவுள்ளது.

இந்த போட்டிகளில் பங்கேற்கவுள்ள 27,000க்கும் மேற்பட்ட வீரர் வீராங்கனைகள், பயிற்றுநர்கள், நடுவர்கள், அலுவலர்கள் மற்றும் தேசிய மாணவர் படை தன்னார்வலர்கள் அனைவருக்கும் போட்டி நடைபெறுகின்ற அனைத்து நாட்களிலும் தங்குவதற்கு வசதியாக தனியார் விடுதிகள் மற்றும் அரசு விருந்தினர் மாளிகை ஆகியவைகளில் 2000க்கும் மேற்பட்ட அறைகள் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. மேலும் மேலக்கோட்டையூரில் உள்ள தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகத்தில் உள்ள மாணவ மாணவியர் விடுதிகளில் தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் போட்டி நடைபெறும் அனைத்து நாட்களிலும் மூன்று வேளை உணவு மற்றும் சிற்றுண்டி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. போட்டி நடைபெறும் இடங்களில் காவல்துறை மூலம் உரிய பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்படவுள்ளது. வீரர் வீராங்கனைகள் போட்டி நடைபெறும் இடங்கள் மற்றும் தங்கும் விடுதிகளுக்கு செல்ல பேருந்து வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், அனைத்து இடங்களிலும் மருத்துவ வசதி ஏற்பாடுகள் சிறந்த முறையில் மேற்கொள்ள அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளது. போட்டிகளை சிறப்பாக நடத்திட ஏதுவாக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகம், மாநகர போக்குவரத்து கழகம், பெருநகர சென்னை மாநகராட்சி, மருத்துவம் மற்றும் பொது சுகாதாரத்துறை மற்றும் காவல் துறை ஆகிய துறைகளுடன் இணைந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வெள்ளகோவில் ஒன்றியத்தில் ரூ.5.12 கோடி மதிப்பீட்டில் சாலைகள் மேம்பாட்டுப்பணி!

## காங்கேயம் நகராட்சியில் பாரம்பரிய மாட்டுச்சந்தை!

### அமைச்சர் மு.பெ.சாமிநாதன் திறந்து வைத்தார்!

திருப்பூர், ஜூன் 26-
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர் தா.கிறிஸ்துராஜ் தலைமையில் மாநகராட்சி 4 ம் மண்டலத் தலைவர், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர் இல.பத்மநாபன் முன்னிலையில் வெள்ளகோவில் ஒன்றியத்திற்குட்பட்ட வரட்டுக்கரை பகுதியில் நெடுஞ்சாலைத் துறை நபார்டு மற்றும் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.5.12 கோடி மதிப்பீட்டில் ஓலப்பாளையம் முதல் மொட்டக்காடு வரையிலும், மேட்டுக்காட்டு வலசு முதல் வரட்டுக்கரை வரையிலும் ஊராட்சி சாலைகளை மாவட்ட இதர சாலைகளாக தரம் உயர்த்துதல் பணியினை துவக்கி வைத்து, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் காங்கேயம் நகராட்சி தாராபுரம் மெயின்ரோடு, கவி ரெஸ்டாரண்ட் அருகில் பாரம்பரிய மாட்டுச்சந்தையை திறந்து வைத்தார்.

அதனைத்தொடர்ந்து காங்கேயம் புதிதாக கட்டப்பட்டுவரும் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தின் அருகில் காளைமாடு சிலை அமைப்பதற்கான இடத்தை அமைச்சர் ஆய்வு செய்தார்.

இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் செல்வி முருகேசன், மாவட்டக் கழக துணைச் செயலாளர் ராசி கே.ஆர். முத்துக்குமார், ஒன்றிய கழக செயலாளர் கே.சந்திரசேகரன், கே.கே.சிவானந்தன், கருணை பிரகாஷ், சு.சந்திரசேகர், சிவ.செந்தில்குமார், எஸ்.ஆர்.எஸ்.செல்வம், சி.பிரபு, நகர கழகச் செயலாளர்கள் வசந்தம் நா.சேமலையப்பன், சபரி எஸ்.முருகானந்தம், முத்தூட் பேரூராட்சி செயலாளர் செண்பகம் பாலு, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கே.கே.ரவிச்சந்திரன், ஒன்றிய துணைச் செயலாளர் சுப்பு, பொதுக்குழு உறுப்பினர் கார்த்திகேயன், காங்கேயம் நகர மன்ற தலைவர் சூரியபிரகாஷ், நகராட்சி ஆணையாளர் வெங்கடேசன், உதவிப்பொறியாளர்கள் சசிக்குமார், கணேசமூர்த்தி, காங்கேயம் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் மகேஷ்குமார் உள்பட ஒன்றிய, நகர, வார்டு, கிளை கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

அர்ச்சகர் பயிற்சிப் பள்ளிகளின் செயல்பாடுகள் - கருத்து வேறுபாடுகளால்

## மூடப்பட்ட திருக்கோயில்களை திறக்க நடவடிக்கைகள்!

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆய்வு!

சென்னை, ஜூன் 26-
தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் நேற்று முன் தினம் (24.6.2023) ஆணையர் அலுவலகத்தில் இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்கள் சார்பாக நடத்தப்படும் பயிற்சிப் பள்ளிகளின் செயல்பாடுகள் மற்றும் கருத்து வேறுபாடுகள் காரணமாக மூடப்பட்டுள்ள திருக்கோயில்களை திறப்பதற்கு துறை சார்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்கள் சார்பாக நடத்தப்படும் அர்ச்சகர் மற்றும் ஓதுவார் பயிற்சிப் பள்ளிகள், தவில் மற்றும் நாதஸ்வர பயிற்சிப் பள்ளிகள், வேத ஆகம பயிற்சிப் பள்ளிகள் மற்றும் பிரபந்த விண்ணப்ப பயிற்சிப் பள்ளிகளின் செயல்பாடுகள் குறித்தும், இந்தாண்டிற்கான மாணவர் சேர்க்கை மற்றும் பயிற்சிப் பள்ளிகளை மேம்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

அதனை தொடர்ந்து, மக்களிடையே நிலவும் கருத்து வேறுபாடுகள் காரணமாக மூடப்பட்டுள்ள துறையின் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களை திறப்பதற்கு இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் விரிவாக ஆய்வு செய்யப்பட்டது.

நிறைவாக, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர், திருக்கோயில்கள் மூலம் நடத்தப்படும் பயிற்சிப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கையை அதிகரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டுமெனவும், கருத்து வேறுபாடுகள் காரணமாக மூடப்பட்டுள்ள திருக்கோயில்களை திறப்பதற்கு சம்பந்தப்பட்ட இணை ஆணையர்கள் மற்றும் உதவி ஆணையர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்களை சந்தித்து ஆலோசனை பெற்று, வருவாய் மற்றும் காவல்துறையினரோடு இணைந்து பொதுமக்கள் மற்றும் பக்தர்களை சந்தித்து அமைதி பேச்சுவார்த்தையின் மூலம் தீர்வு கண்டு மூடப்பட்டுள்ள திருக்கோயில்களை பக்தர்கள் வழிபாட்டிற்கு திறப்பதற்கான நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ள வேண்டுமெனவும் அறிவுரைகளை வழங்கினார்.

இக்கூட்டத்தில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மைச் செயலர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத் துறை சிறப்புப் பணி அலுவலர் ஜெ.குமரகுருபரன், ஆணையர் க.வீ.முரளீதரன், கூடுதல் ஆணையர்கள் அ.சங்கர், திருமதி ந.திருமகள், திருமதி சி.ஹரிப்ரியா, இணை ஆணையர்கள், உதவி ஆணையர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (24.06.2023) ராதாகிருஷ்ணன் ஸ்டேடியத்தில் நடைபெற்று வருகின்ற புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகளை அதிகாரிகளுடன் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் போது தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி ஆகியோர் உடனிருந்தனர்.